**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

179

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# Life of Women in Andanur Sura's Short Story

**Mrs. K. Sengodi**, Reg. No.BDU2410632780621, Researcher, Department of Tamil, Government Arts College, Kumbakonam.-612002, Affiliated with Bharathidhasan University, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0002-1126-0505**
**Dr. N. Krishnaveni**, Associate Professor of Tamil, Government Arts College, Kumbakonam.-612002, Affiliated with Bharathidhasan University, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0003-4985-1332**
**DOI: 10.5281/zenodo.14744754**

## Abstract

*It is a historical fact that women, who should have equal status among men, have been subjected to many tortures and degradations over time due to the patriarchal norms that have been firmly established in society. Although fiction is a creation of time, it also serves as historical evidence showing the state of a society. Fictions, especially novels, are praised by historians and sociologists as contemporary evidence of life. Many short stories that emerged in this century serve as social documents showing the lives of women in the family and social arenas in the circumstances of that time. In addition, even though women have attained a high position in society, their lives are full of problems. Most of the problems that arise centring on women are centred on the restrictions imposed on women in society, marriage, family relations, economics and sexual problems. Andanur Sura is a famous short story writer. He explores the various life problems faced by women in Tamil society. Sexual harassment, love marriage at an early age and the plight of widows are the common plots in Andanur Sura's short stories such as "Aalaaoru Pinchu", "Virati", "Mulajadam", "Kurali", "Uttama Seelar", "Paruvuthunikai", and "Thiadi Aravam". This article explores how Andanur Sura's short stories reveal the problems of women.*

**Keywords**: Life, Women, Andanur Sura, Short Story, Tamil Society.

## References

[1] Guptha, A.R. *Indu Samuthayatthil Penkal*. Jothshna Prakashan, New Delhi, 1992.
[2] Sivatthampi, K. *Navalum Vazhkkaiyum*. Tamil Putthakalayam, Chennai, 1978.
[3] Suseela. A.M. *Viduthalaikku Mun Tamil Navalkalil Penkal*. Ulaka Tamizharaycchi, Niruvanam, Chennai -113, Muthal Pathippu, 1995.
[4] Subramanian, N. *Sankakala Vazhviyal*. New Century Book House Pvt. Ltd., Chennai – 98, 2019.
[5] Sura, Andanoor. *Pirana Nirak Kanavu*. Panmuka Medai Veliyeedu, Theni, 2018.
[6] Sura, Andanoor. *Etthisai Selinum*. Thadukkai Veliyeedu, Kantharvakottai, Puthukkottai – 301, 2020`
[7] Sura, Andanoor. *Thadukkai*. Vetti Mozhi Velittakam, Sathiram Theru, Dindugal – 1, 2021.
[8] Balasubramaniam, Sirpi & Neela Padmanabhan. *Puthiya Tamil Ilakkiya Varalaru*. Sahitya Akademi, Thenampettai, Chennai – 18, 2014.
[9] Manikkavasakan, Gna. *Tholkappiyam Moolamum Vilakka Uraiyum*. Uma Pathippagam, Mannadi, Chennai -1, 2010.
[10] Vasuki, D. "Penkalin Sirukathaiyil Sivappu Kazhuthu Piracchinaikal Konda oru Pacchai Paravai." *Tamil Sarvathesa Aaraycchi Ithazh*.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

[11] Joshmin Priya, M. "*Penniyap Parvaiyil M.A.Suseelavin Sirukathaiyil Paliyal Arasiyal*."

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# அண்டனூர் சுராவின் சிறுகதையில் பெண்களின் வாழ்வியல்

**திருமதி க. செங்கொடி,** பதிவு எண்: BDU2410632780621, ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி கும்பகோணம்- 612002, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0002-1126-0505**
**முனைவர் ந. கிருஷ்ணவேணி ( நெறியாளர் ),** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி கும்பகோணம்- 612002, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0003-4985-1332**
**DOI: 10.5281/zenodo.14744754**

**ஆய்வுச்சுருக்கம்**

*அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் அவளொரு பிஞ்சு, விராட்டி, ஊழியம், குரலி, உத்தம சீலர், பருவத்துணிக்கை, தீயடி அரவம் என்னும் சிறுகதைகளில் பெண்கள் சமுதாயத்தில் சந்திக்கும் பலதரப்பட்ட வாழ்வியல் சிக்கல்களான பாலியல் சீண்டல்கள், சிறு வயதில் காதல் திருமணம், விதவைப் பெண்களின் நிலை, ஆகியவற்றை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வுச்சுருக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** வாழ்க்கை, பெண்கள், அண்டனூர் சுரா, சிறுகதை, தமிழ் சமூகம்.

**முன்னுரை**

மனித இனத்தின் சரிநிகர் மதிப்பைப் பெற வேண்டிய பெண்ணினம் சமுதாயத்தில் அசைக்க முடியாதபடி உருவாகிப்போன ஆணாதிக்கச் சிந்தனைப் போக்குகளால் காலங்காலமாகப் பல சித்திரவதைகளுக்கும், சீரழிவுக்கும் ஆளாக நேர்ந்தது என்பது மறுக்கவும் மறைக்கவும் இயலாத உண்மை வரலாறாகும். "புனைகதை காலசிருஷ்டியே எனினும் சமுதாய மாற்றத்தை மாறும் சமுதாயத்தின் நிலையைக் காட்டும் வரலாற்றுச் சான்றாகவும் விளங்குகின்றது. புனைகதைகள் - சிறப்பாக நாவல்கள் - சமகாலச் சான்றாக வரலாற்றாசிரியராலும், சமூகவியலாசிரியர்களாலும் போற்றப்படுகின்றன" (கா.சிவத்தம்பி. ப-20) என்பார் கா. சிவத்தம்பி. இந்நூற்றாண்டில் எழுந்த பல சிறுகதைகள் அன்றைய காலச் சூழ்நிலையில் குடும்ப, சமூகத் தளங்களில் பெண்களின் வாழ்வியலைக் காட்டுகின்ற சமூக ஆவணங்களாக விளங்குகின்றன. அதுமட்டுமின்றி சமுதாயத்தில் பெண்கள் உயரிய பதவியை அடைந்தாலும் அவர்களது வாழ்வானது சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கின்றன. பெரும்பாலும் பெண்களை மையப்படுத்தி எழும் சிக்கல்கள் சமூகத்தில் பெண்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், திருமணம், குடும்ப உறவு, பொருளாதாரம், பாலியல் சிக்கல்கள் ஆகியவற்றை மையமிட்டதாகவே அமைகின்றன. அத்தகைய பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை அண்டனூர் சுராவின் சிறுகதைகள் வெளிப்படுத்துவதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**வாழ்வியல்**

அன்றாட செயற்பாடுகள், பழக்கங்கள், பொருள்-உளவியல் தேவைகள், பொழுதுப்போக்குகள், உறவாடல்கள், வேலை குடும்ப சுழற்சிகள் என வாழ்க்கையின் நாளாந்த வாழ்வியல் அம்சங்களை அன்றாட வாழ்வியல் குறிக்கின்றது. பெண்கள் தங்களின் குடும்பத்திற்காகத் தியாகம் செய்கின்றனர். அவர்களே முதன்மை யானவராகவும் திகழ்கின்றனர். "பாரம்பரியப் பண்பாட்டின் தொடர்ச்சி முறிவைச் சித்தரிக்கக் குடும்பம் எனும் சமூக நிறுவனத்தின் அச்சாணியான பெண் (தாய், மனைவி, தமக்கை, தங்கை) முதன்மை நிலைப்பட்டது ஆச்சரியமன்று. மேனாட்டுச் சமூக அறத்தாக்கங்கள் காரணமாக முதன்முதலில் கவனத்தை ஈர்த்தது இந்திய சமூகத்தில் பெண்ணின் நிலையேயாகும்" (கா.சிவத்தம்பி. ப-55) இவ்வாறாக பெண்களின் வாழ்வியல் குடும்பத்தையும் சமூகத்தையும் சுற்றியே உள்ளதைக் காணமுடிகின்றது.

**பண்டைய காலத்தில் பெண்களின் வாழ்வியல்**

சங்ககால தமிழ் மகளிர் நிலை இன்றைக்கு இருப்பது போலவே இருந்திருக்க முடியாது; ஆயினும் விந்தையாகவே இன்றைக்கும் அன்றைக்கும் அவர்களுடைய நிலைகளில் அதிக வேறுபாடு இருந்திருக்க முடியாது. பண்டைய தமிழகத்தில் சட்ட அடிப்படையில் ஆடவர் மகளிரிடையே சமூக சமத்துவக் கோட்பாடு இருந்திருக்கவில்லை, பண்டைய காலத்தில் ஆண், பெண் பேதமைகள் இருந்துள்ளன. அஞ்சாது பழகுதல் ஆடவனுக்குரிய பண்பு, ஆனால் நாணமும் கூச்சமும் மகளிர்க்குச் சிறக்கும் பண்புகள் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

**பெருமையும் உரனும் ஆடூஉ மேன**
**அச்சமும் நாணமும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்., ப – 404)**

ஆதலால் ஐந்திணைக் காதலிலும் அதாவது இயற்கைப் புணர்ச்சியிலும், ஆண்மகன் தன் காதலை வாய்விட்டுச் சொல்லலாம். ஆனால் பெண் நோக்கிலோ சைகையாலோ தான் தெரிவிக்கலாம். என்று பெண்களின் காதலை வெளிப்படுத்துவதில் கூட வரையறை வைத்துள்ளனர்.

**காமத் திணையில் கண் நின்று வரூஉம்**
**நாணும் மடனும் பெண்மையை ஆகலின்**
**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கி**
**நெறிப்பட வாரா அவள்வயின் ஆன (தொல்., ப – 411)**

**சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல்**

தமிழ் இலக்கிய வகைமைகளில் சிறுகதை இலக்கியம் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்று விளங்குகின்றது. மிகுதியான வாசிப்பாளர்களை உடைய இலக்கிய வகைமையாகச் சிறுகதை விளங்குகின்றது. ஒவ்வோர் ஆண்டும் எண்ணிலடங்காச் சிறுகதைகள் சமூகத்தின்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

நிகழ்வுகளையும் சிக்கல்களையும் பிரதிபலிக்கும் வகையில் வெளிவந்த வண்ணம் உள்ளன. சிறுகதைகள் பெண்களின் வேலை, வயது, கல்வி போன்றவற்றால் வேறுபடும் பலதரப்பட்ட பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை விவரிக்கின்றது. "இலக்கியம் சமூகத்தைப் பிரதிப்பலிக்கும் காலக் கண்ணாடி. உலக வாழ்வில் பெண்ணிற்கு ஏற்படும் சிக்கல்கள் ஆணினின்று பெரிதும் வேறுபடுவதாக உள்ளன. பெண்கள் வாழ்வில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்" (சிற்பி, பாலசுப்ரமணியம், நீல பத்மநாபன். ப – 242) என்பதை சிறுகதைகள் கூறுகின்றன.

**அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல்**

இருபதாம் நூற்றாண்டின் சிறுகதைப் படைப்பாளர்களில் அண்டனூர் சுராவும் ஒருவர். இவர் இன்றையச் சமூதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் வன்கொடுமை, விதவைப் பெண்களின் நிலை, இளம் வயது திருமணம், வறுமையில் வாடும் தாயின் நிலை, பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவற்றை உத்தம சீலர், விராட்டி, பருவத்துணிக்கை, அவளொரு பிஞ்சு என்னும் சிறுகதைகள் வாயிலாகப் பெண்களின் வாழ்வியலைக் கூறியுள்ளார்.

**கைம்பெண் வாழ்வியல்**

கைம்மை நிலையடைந்தப் பெண்ணுக்குப் புறக் கோலத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் (தலைமுடியினை மழித்தல், வெள்ளாடை அணிவித்தல் முதலியன) சமூகத்தில் அவளுக்கு இழைக்கப்படும் அவமதிப்பு, அவளது சார்பு நிலை, அவளது கற்புக்கு நேரும் ஆபத்து அல்லது பழி விதவையரின் அழகிய தோற்றம் கண்டு ஆடவர்கள் விருப்பம் கொள்ளுதல் போன்றவை கைம்மைப் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களாகும். விராட்டி என்னும் சிறுகதையில் நாற்பது வயது விதவைப் பெண்ணாக வரும் பார்வதி சாணங்களைப் பொறுக்கி விராட்டிச் செய்துப் பிழைப்பு நடத்தும் பெண். அவள் தன் கணவனைச் சிறு வயதில் இழந்து தந்தையின் வீட்டில் வசிக்கிறாள்.கணவனை இழந்தப் பெண்கள் சுயமாக வாழ நினைத்தாலும் இச்சமூதாயத்தில் வாழும் சில ஆண்கள் அவர்களை நிம்மதியாக வாழ விடுவதில்லை. தங்களின் இச்சைக்கு இணங்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

> **அவளுக்கும் வயது நாற்பதைத் தாண்டிவிட்டது. இதுநாள் வரை இப்படியான அவமதிப்பை அவள் எதிர்கொண்டதில்லை. இத்தனைக்கும் அவளை அப்படியாகக் கேட்டவன், இருபத்தைந்து முப்பது வயதுக்குட்பட்டவனாகவே இருந்திருந்தான். அவன் கேட்டிருந்த அக்கேள்வி, காது வழியே நெஞ்சுக்குள் இறங்குகையில், அடிவயிறு குடலுடன் சேர்ந்துக் குமட்டிக் கொண்டு வந்தது. (அண்டனூர் சுரா. ப – 123)**

இக்கதையில் இருபத்தைந்து வயதையொட்டிய இளைஞன் தன் தாய் அல்லது தமக்கை வயதுல்ல பார்வதியைத் தவறான கண்ணோட்டத்துடன் காண்பது இன்றைய தலைமுறையின் தவறான சீரழிவாக இச்சிறுகதைக் காட்டுகிறது. இன்றளவும் கைம்மைப் பெண்களை இச்சமூதாயம் தவறான கண்ணோட்டத்துடன் தான் காண்கின்றது. ஏனெனில் அவர்கள்

வேலைக்கோ அல்லது வெளியில் செல்லும் பொழுது நன்றாக ஆடை ஆபரணங்கள் அணிந்துச் சென்றால் கூட அவர்களைத் தவறாகப் பேசுகின்றது.

> **….என்ன வார்த்தைக் கேட்டுவிட்டான். அப்படிக் கேட்க, அவனுக்கு எப்படி தைரியம் வந்தது? நான் பெண் என்பதாலா? கேட்டதை விடும், அதன்பிறகு அவன் சிரித்தது, மீசை மயிற்றைக் கடித்தது, என்ன சொல்கிறாய், அங்கே இங்கேயென பார்வையால் துளைத்தது. அதையெல்லாம் நினைக்கையில், அவளுக்குக் கோபமும் விரக்தியும் உடம்பெல்லாம் எரிச்சலாய் பற்றியது. (அண்டனூர் சுரா. ப – 123).**

**இளம் வயதில் திருமணம் புரிந்த பெண்களின் வாழ்வியல்**

பண்டைய காலத்தில் பெற்றோர்கள் இளம் வயதிலேயே பெண்களைத் திருமணம் செய்து வைத்தனர்.ஆகையால் சிறுவயதிலேயே விதவைக் கோலம், சதி என்னும் உடங்கட்டை ஏறுதல், கல்வி மறுப்பு போன்றவை நிகழ்ந்தன. அவற்றைத் தடுப்பதற்கு டாக்டர் முத்துலெட்சுமி, தர்மாம்பாள், தந்தை பெரியார் ஆகியோர் பாடுப்பட்டனர். "1930 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சாரதா சட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்ட குழந்தை மணத் தடுப்புச் சட்டம் பெண்களின் திருமண வயதை உயர்த்தியது."(எ.ஆர். குப்தா. ப.77) குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டன. ஆனால் இன்றையக் காலக்கட்டத்தில் பெண்கள் காதல் என்ற பெயரில் சிறுவயதிலேயே திருமணம், குழந்தைப் பேறு, குடும்பச் சுமை ஆகியவற்றில் சிக்குண்டு தவிக்கின்றனர் என்பதை பருவத் துணிக்கை சிறுகதை எடுத்தியம்புகிறது.

> **பேருந்து துவாக்குடி சுங்கச் சாவடிக்குள் நுழைந்து கீழ்மூச்சு வாங்கி நின்றது. அப்போது கேவுதலுடன் கூடிய அழுகைக் குரல் கேட்டது. நான் மெல்ல எழுந்து, அழுவது குழந்தைதானோ எனப் பார்த்தேன். குழந்தைதான் அழுதது. (அண்டனூர் சுரா. ப - 119.)**

தன்னைப் போல் உள்ள சகப் பெண்கள் தோழிகள் சுதந்திரமாக பள்ளிக்கு வேலைக்குச் செல்வதைப் பார்க்கையில் அழும் கைக்குழந்தையுடன் பேருந்தில் அமர்ந்த அப்பெண் மனம் குமுறினாள்.

**அகதிப் பெண்களின் வாழ்வியல்**

அகதிகள் என்பவர்கள் "பொதுமைப்படுத்தப் பட்ட வன்முறை, வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, உள்நாட்டு மோதல்கள், பாரம்பரிய மனித உரிமை மீறல்கள் அல்லது பொது ஒழுங்கை கடுமையாகச் சீர்குலைக்கும் பிற சூழ்நிலைகளால் தங்கள் வாழ்க்கை, பாதுகாப்பு அல்லது சுதந்திரம் அச்சுறுத்தப்பட்டதால் தங்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்" (அகதிகள் மீதான கார்டேஜினா பிரகடணம். UNHCR) தங்களுக்கென்று இருப்பிடம் இல்லாத அனைவருமே இச்சமுதாயத்தில் அகதிகளாகவே இருக்கின்றனர். குறிப்பாக பெண்கள் குழந்தைகளுடன் அகதிகளாக வேலையின்றி பிச்சை எடுத்து வாழும் நிலைக்கு ஆளாகின்றனர். மிடற்று தாகம் என்னும் சிறுகதையில் ஒரு தாய் தனது குழந்தைக்காக வீடு வீடாக ஏறி பால் வேண்டும் என்று பிச்சைக் கேட்கிறாள். ஆனால் அவள் தன் குழந்தையின் பசிக்காகப் பால்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

கேட்கவில்லை. பசியின் கொடுமையாலும் அகதி என்பதால் யாரும் வேலை அளிக்காததாலும் அவளுடைய மார்பிலும் பால் வற்றிப்போனது.

> **அம்மா... புள்ளைக்கு பால் கொடுங்கம்மா... ஒரு புதரினையொட்டிக் குழியொன்று பறித்திருந்தது. அதற்குள் குழந்தையைக் கிடத்தினாள். முகத்தை கிழக்குப் பக்கமாகத் திருப்பினாள். அவளுடைய கைகள் நடுங்கின, ஒரு கையை ஒரு கையால் இறுகப்பிடித்துக் கொண்டு மண்ணைக் குழிக்குள் தள்ளினாள். மண்கட்டி குழிக்குள் விழுகையில் அடிவயிறுக் குலுக்கியது. மண்ணைக் கூம்பாகக் குவித்தாள். பால் பாக்கெட்டைப் பற்களால் கிழித்துத் தலை மேட்டிடத்தில் பீச்சினாள். அவள் நெஞ்சிற்குள் யாரோ குதிப்பதைப் போலிருந்தது. (அண்டனூர் சுரா. ப - 24.)**

ஆகையால் பசியால் அழுது அழுது அக்குழந்தை இறந்துவிட்டது. அக்குழந்தையின் ஈமச் சடங்கிற்கு பால் கேட்டு ஒவ்வொரு வீடாகச் சென்று பிச்சைக் கேட்டாள் என்பதை இச்சிறுகதை விளக்குகிறது.

**வேலைக்குச் செல்லும் பெண்களின் வாழ்வியல்**

இன்றைய காலக்கட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பல்வேறு விதமான பணிகளை மேற்கொள்கின்றனர். சித்தாள் வேலையிலிருந்து ஐ.டி நிறுவனங்கள் வரை பெண்கள் அவரவர் திறமைக்கேற்றாற் போல வேலைச் செய்கின்றனர். அவ்வாறு வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அவர்களுடன் பணிப்புரியும் ஆண்களால் ஏற்படும் பாலியல் ரீதியாக உள்ள இன்னல்களை அனுபவிக்கின்றனர். அவ்வாறு வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பாதுகாப்பு தரும் விதமாக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் ஒன்று மீ-டூ என்னும் செயலி மூலம் பெண்களுக்குத் தரப்படும் பாலியல் தொந்தரவுகளுக்குத் தீர்வுக் காணப்படுகிறது. இதனை உத்தம சீலர் சிறுகதைக் கூறுகின்றது. ஒரு நிறுவனத்தில் சாந்தினி தட்டச்சு செய்யும் வேலைப் பார்க்கின்றாள். அங்கு அவளின் மேலாளரிடமும் தந்தை வயதையொத்த சுதாகர் என்பரிடமிருந்தும் பாலியல் தொந்தரவுகள் வருகின்றன.

> **சாந்தினி முகநூல் பக்கத்தில் பாலியல் ரீதியாக தொல்லைக் கொடுத்தவர்களின் பெயர்களைப் பதிவிடப் போகிறார் என்கிற செய்தியை அமலா வாயிலாக கறந்திருந்தான் சுதாகரன். அந்த ரகசிய செய்தியை அறிந்ததிலிருந்தே அவனது அன்றாட இத்யாதிகளின் நடவடிக்கையில் பெருந்துண்டு விழுந்திருந்தது. (அண்டனூர் சுரா.ப – 47)**

அதற்கு சாந்தினி பயப்படாமல் தனது முகநூலில் அவர்களைப் பற்றி பதிவிட்டு மற்ற பெண் ஊழியர்களையும் காப்பாற்றுகின்றாள் என இன்றைய காலத்தில் பெண்கள் தைரியத்துடன் இருக்க வேண்டும் என்பதை இச்சிறுகதை உணர்த்துகின்றது.

**முடிவுரை**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

பெண்கள் தங்களுடைய வாழ்வியலைத் தங்களின் குடும்பத்திற்காகவும் சமூதாயத்திற்காகவும் வாழ்கின்றனர். அதுமட்டுமின்றி இளமை மணம், விதவை நிலை, பாலியல் தொந்தரவுகள் வாயிலாக மனம் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிப்பிற்குள்ளாகின்றனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம். மேலும் நெடுங்காலமாகப் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகளை படைப்பாளர்கள் நாவல் சிறுகதைகள் ஆகியவற்றின் வாயிலாக இச்சமூகத்திற்கு காலங்காலமாக பெண்களின் வாழ்வியலை எடுத்தியம்புகின்றனர் என்பது மிகையாகாது. பண்டைய காலத்தில் பெண்கள் அச்சம் மடன் நாணம் ஆகிய குணநலன்களுடன் திகழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது. பெண்கள் வீட்டிலிருந்தாலும் வேலைக்குச் சென்றாலும் தங்களின் கடமைகளைச் சரியாகச் செய்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. கணவனை இழந்த கைம்மைப் பெண்கள் சுய முன்னேற்றத்துடன் உழைத்து வாழ்கிறார்கள் என்பதை அறிய முடிகின்றது. இளம் வயதில் பெண்கள் திருமணம் செய்துக் கொண்டு படும் துன்பங்களையும் வாழ்வியல் சிக்கல்களையும் அறிந்துக் கொள்ள முடிகின்றது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகளைக் கண்டு அஞ்சாமல் பெண்கள் தைரியத்துடன் செயல்படுவதை அறிந்துக் கொள்ள முடிகின்றது. அகதியாக வாழும் பெண்களின் வாழ்வியலின் சிக்கல்களையும் துயரங்களையும் அறிந்துக் கொள்ள முடிகின்றது.

### குறிப்புகள்

[1] குப்தா, அ. ஆர். *இந்து சமுதாயத்தில் பெண்கள்.* ஜோத்ஸ்னா பிரகாஷன், புது டில்லி, 1982.
[2] சிவத்தம்பி. கா. *நாவலும் வாழ்க்கையும்.* தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.
[3] சுசீலா. ஏ. எம். *விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள்.* உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600113, 1995.
[4] சுப்ரமண்யன், ந. *சங்க கால வாழ்வியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98, 2019.
[5] சுரா, அண்டனூர். *பிராண நிறக் கனவு.* பண்முக மேடை வெளியீடு, தேனி, 2018.
[6] சுரா, அண்டனூர். *எத்திசைச் செலினும்.* தடுக்கை வெளியீடு, புதுக்கோட்டை - 1, 2020.
[7] சுரா, அண்டனூர். *தடுக்கை.* வெற்றி மொழி வெளிட்டகம், திண்டுக்கல் -624001, 2021.
[8] பாலசுப்ரமணியம், சிற்பி & நீல பத்மநாபன். *புதிய தமிழ் இலக்கிய வரலாறு.* சாகித்திய அகாதெமி, சென்னை - 600018, 2014.
[9] மாணிக்கவாசகன். ஞா. *தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும்.* உமா பதிப்பகம், சென்னை - 600001, 2010.
[10] வாசுகி, டி. "பெண்களின் சிறுகதையில் சிவப்பு கழுத்து பிரச்சினைகள் கொண்ட ஒரு பச்சை பறவை." *தமிழ் சர்வதேச ஆராய்ச்சி இதழ்.*

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

[11] ஜாஸ்மின் பிரியா, எம். "பெண்ணியப் பார்வையில் எம்.ஏ.சுசீலாவின் சிறுகதையில் பாலியல் அரசியல்."

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.